# யூலை – 27 –வெள்ளி

**புனித இன்னோசென்ட்**

**“உம்முடைய வழிகள் எல்லாம் வளம் கொழிக்கின்றன.” –திபா65:11**

## முதல் வாசகம் : ஏரேமியா 3: 14-17

ஆண்டவர் கூறுவதுமக்களே! என்னிடம் திரும்பிவாருங்கள் ஏனெனில், நானே உங்கள் தலைவன் நகருக்கு ஒருவனையும் குடும்பத்திற்கு இருவரையுமாகத் தெரிந்தெடுத்து உங்களைச் சீயோனுக்குக் கூட்டிவருவேன்.என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்குக் கொடுப்பேன். அவர்கள் உங்களை அறிவுடனும், முன்மதியுடனும் வழிநடத்துவார்கள். நீங்கள் நாட்டில் பல்கிப்பெருகும் அக்காலத்தில் யாரும் ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழைபற்றியே பேசமாட்டார்கள். அது அவர்கள் எண்ணத்திலோ நினைவிலோ இராது. அது இல்லை என்று வருந்தி இனி ஒன்றும்செய்யமாட்டார்கள், என்கிறார் ஆண்டவர். அக்காலத்தில் எருசலேமை ”ஆண்டவரின் அரியணை” என அழைப்பார்கள். ஆண்டவரின் பெயரை முன்னிட்டு எல்லா மக்களினத்தாரும் எருசலேமில் வந்துகூடுவர். தங்கள் தீய இதயப் பிடிவாதத்தின்படி இனி நடக்கமாட்டார்கள்.

**பதில்பாடல் :** ஆயர் தம் மந்தையைக் காப்பதுபோல ஆண்டவர்
நம்மைக் காத்திடுவார்.

## நற்செய்தி : மத்தேயு 13: 18 – 23

அக்காலத்தில் இயேசு தம்சீடருக்குக் கூறியது: ”விதைப்பவர் உவமையைப் பற்றிக்கேளுங்கள். வழியோரம் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறையாட்சியைக் குறித்த இறைவார்த்தையைக்கேட்டும் புரிந்துகொள்ளமாட்டார்கள். அவர்கள் உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்லுவான்.பாறைப்பகுதிகளில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக்கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள்.ஆனால், அவர்கள் வேரற்றவர்கள். எனவே அவர்கள் சிறிதுகாலமே நிலைத்திருப்பார்கள் இறைவார்த்தையின் பொருட்டு வேதனையோ இன்னலோ நேர்ந்த உடனே தடுமாற்றம் அடைவார்கள்.முட்செடிகளுக்கு இடையில் விழுந்த விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தை யைக் கேட்டும் உலகக்கவலையும் செல்வமாயையும் அவ்வார்த்தையை நெருக்கிவிடுவதால் பயன் அளிக்க மாட்டார்கள்.நல்லநிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டுப்புரிந்து கொள்வார்கள். இவர்களுள் சிலர் நூறுமடங்காகவும், சிலர் அறுபதுமடங்காகவும் சிலர் முப்பது மடங்காகவும் பயன் அளிப்பர்.” என்றார்.

**தியானம் :** இறைவார்த்தையை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ்வதன் மூலம் நிறைவாழ்வை அடையமுடியும் என்பதனை விதைப்பவன் உவமை எமக்குத் தெரிவிக்கின்றது. ஆதலால் இறைவார்த்தை எமதுள்ளத்தில் முளைவிட்டு பெருவிருட்சமாக வளரக்கூடிய விதத்தினில் நாம் வாழுகின்றோமா? அல்லது முட்புதராக, கற்பாறையாக, வழியோர நிலமாக வாழ்கின்றோமா? எம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். ஆதியிலே இறைவன் தமது திருமகனை வார்த்தையே மனுவுருவானவராக, இவ்வுலகிற்கு அனுப்பி மனுக்குலத்தை மீட்டெடுத்தார் என விவிலியத்திலே படிக்கின்றோம். இறைவார்த்தை எமதுள்ளத்தில் முளைவிட்டு பெருவிருட்சமாக வளரக்கூடிய விதத்தினில் நாம் வாழ்ந்து பலன் கொடுக்கவேண்டும். நிலத்தில் விழுந்த விதை மடிந்து புதிய பயிராக முளைத்து எழுவது போன்று நாமும் கிறிஸ்துவின் துன்பங்களிலும், பாடுகளிலும் பங்கு பெறவேண்டும். இறைவார்த்தை என்பது வெறும் காதால் வெறுமனே கேட்டுவிட்டுப் போவதற்காக எமக்குப் போதிக்கப்படுவதில்லை. அல்லது அழகாக எழுதி சுவர்களில் மாட்டிவைப்பதற்காகவும் இல்லை. மாறாக, நிறைவாழ்வை நாமடைய வேண்டுமாயின் இறைவார்த்தைக்கு அமைவான நல்ல பலன்கொடுக்கும் இறைமகன் இயேசுவின் விளைநிலங்களாகவும், நல்விதைகளாகவும் நாம் மாற்றமடைய வேண்டும். எனவே, இறைவார்த்தை ஏற்படும் மாற்றத்தால் அடுத்தவர்கள் பயன்படக்கூடிய விதத்தினில் நாம் பலன்தரும் பெருவிருட்சங்களாக வளரமுடியாவிடினும், சிறுபயிர்களாகவாவது வாழமுற்படுவோம். சிறுதுள்ளி பெருவெள்ளம் போன்று எமது சிறிய முயற்சிகள் ஒவ்வொன்றும் இறைவார்த்தை அறிவிப்புப் பணிகளாக மாற்றமடையட்டும். நாமும் இறைவார்த்தையின் விளைநிலங்களாக மட்டுமல்ல, நல்ல விதைகளாகவும் மாற்றப்பட இறைவனின் தூய ஆவியானவரது துணைவேண்டுவோம்.